**செய்தி வெளியீடு எண் : 327** **நாள்: 05.03.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் இன்று 05.03.2022 தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தில் (Enterpreneur Development Institute (EDI), தாட்கோ பொருளாதார மேம்பாட்டு திட்டத்தில் கடன் பெற்று தொழில் தொடங்க உள்ள பயனாளிகளுடன் கலந்துரையாடினார்கள். பயனாளிகளுக்கு பயிற்சி பற்றிய சிறப்பு அம்சங்களையும், வங்கி அரசு மானியத்துடன் கடனை பெற்று தொழில் செய்ய உள்ள திட்டங்கள் பற்றி தெரிவித்தார்கள்.

EDI கூடுதல் இயக்குநர் திரு. மனோகர் சிங், அவர்கள் 7 நாள் பயிற்சி திட்டத்தில் சுயதொழில் செய்ய முடிவெடுத்தல், தொழில் முனைவோர் குணநலன்கள், தொழில் வாய்ப்பு தேடல், திட்ட அறிக்கை தயாரித்தல், நிதி (பணம்), நிலம் மற்றும் கட்டிடம், நீர்/மின்சார வசதி, இயந்திரங்களைப் பொருத்துதல் பணியாளர்களை நியமித்தல், மூலப் பொருட்களை கொள்முதல் செய்தல், நவீன தொழில் நுட்பம், உற்பத்தி/ விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல், விலை நிர்ணயத் திட்டம், தொழிலை நிர்வகித்தல், பணப் புழக்கம், வணிக மேற்பார்வை/ கண்காணிப்பு, வாடிக்கையாளர்களை தக்கவைத்தலும், விற்பனை அதிகப்படுத்துதலும், வணிகத்தை விரிவுபடுத்துதல், கணக்கு பதிவியல், தொழில் நலிவடைதலை தவிர்த்தல், வங்கியின் பணிகளும் நடைமுறைகளும், சிறு தொழில் துவக்குதல் போன்ற பாட பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது என தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தாட்கோ திட்டங்கள் புதிய முனைப்புடன் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்ததன் அடிப்படையில் இந்த 7 நாள் தொழில் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி பெறுவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி முடித்தவுடன் தங்களுடைய தொழில் சார்ந்த சந்தேகங்கள் விளக்கம் அளிக்கும் வகையில் கோயம்புத்தூர் (9445029498), திருச்சி (7448828501), மதுரை (9445029542) மற்றும் சென்னை (7448828476) ஆகிய எண்களில் சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

தாட்கோ மேலாண்மை இயக்குநர் பேசுகையில் 2021-22 ஆம் நிதி ஆண்டில் தாட்கோ திட்டங்களில் பயனடைந்த 5000 நபர்களுக்கு தொழில் மேலாண்மை பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது, அதில் முதற்கட்டமாக 1000 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது, மீதம் உள்ள தொழில் முனைவோருக்கும் அந்தந்த மாவட்ட அளவிலே பயிற்சி விரைவில் வழங்கப்படும் என தெரிவித்தார்கள். இந்த பயிற்சியில் தொழில் முனைவோர், தொடர்புடைய அரசு துறை அதிகாரிகள், வங்கி மேலாளர்கள், துறை வல்லுநர்கள் ஆகியோர்கள் பயிற்சி வகுப்பினை நடத்துவதால் தாட்கோ, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின முனைவோருக்கு பல்வேறு அரசு திட்டங்கள் பற்றிய விவரங்கள் ஒரே குடையின் கீழ் கிடைக்கின்றது. தாட்கோ பல்வேறு திட்டங்கள் பற்றிய கையேடும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த வருட இலக்கு ரூ.107 கோடி மானியத்தில் ரூ.92.51 கோடி மானியம் வழங்குவதற்கு வங்கிகள் கடன் ஒப்புதல் ஆணை வழங்கி இருக்கின்றது. மீதமுள்ள நபர்களுக்கு மார்ச் 15ம் தேதிக்குள் கடன் ஒப்புதல் ஆணை பெற்று அளிக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**